www.tamilarangam.net

## வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்தது என்ன?

# விசாரணையா? தண்டனையா?

**மாணவர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே!**
**ஜனநாயக உரிமைக்கு குரல் கொடுங்கள்!**

புதிய ஜனநாயக மாணவர் சங்கத்தினால் (N. D. S. U) 23/01/1986-இல் சிறீலங்கா பாசிச அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 1000மீ பாதுகாப்பு வலயத்தை எதிர்த்தும், முக்கியமாகப் பண்ணைப் பாலம் இந்த வலயத்திற்குள் அமைந்திருப்பதால் தீவுப் பகுதி மக்களுக்கு ஏற்படும் பாதிப்பை உணர்த்தியும் பொதுமக்களையும் மாணவர்களையும் கிளர்ந்தெழுமாறு கோரி ஓர் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டது.

இப்பிரசுரத்தை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி இல் வழங்கச் சென்ற எமது தோழர்கள் நிர்வாகத்திடம் அனுமதி கோரியபோது அனுமதி மறுக்கப்பட்டதால் அதை மீறி பிரசுரத்தை வழங்கினார்கள். இவ்வாறு ஒரு வகுப்பில் பிரசுரம் வழங்கப்பட்ட போது வகுப்பு ஆசிரியர் தனது அனுமதி கோரப்படவில்லையென்று எமது தோழரை ஏசியுள்ளார். ஆனால் அந்தத் தோழர் தான் வகுப்பில் நுழைய முன் அனுமதி கோரியதாகச் சொன்ன போது ஆசிரியர் வகுப்பைவிட்டு வெளியே போ என்று திரும்பவும் ஏசினார். பின்னர் ஆசிரியர் எமது தோழரை கழுத்துச் சேட்டில் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு சென்ற போது இருவரிடையிலும் வாக்குவாதம் ஏற்பட்டு ஆசிரியர் தாக்கியதால் எமது தோழரும் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில் எமது தோழர் கல்லூரியின் கட்டுப்பாட்டை மீறியதும், ஆசிரியரைத் தாக்கியதும் குற்றமென்றே நாம் எம்மைச் சுய விமர்சனம் செய்வதுடன் ஆசிரியருக்கு ஏற்பட்ட மனத்தாங்கலுக்காக மிகவும் மனவருத்தப்படுகின்றோம்.

இச் சம்பவத்தால் ஆத்திரமுற்று மாணவர்கள் தன்னெழுச்சியாகக் கிளர்ந்தெழுந்த போதும் எமது தோழரை கண்ணியமாகவே விசாரணை செய்துள்ளார்கள். ஆனால் நிர்வாகமோ கையாலாகாத் தனமாக செயலிழந்து நின்றதைக் காணக்கூடியதாகவிருந்தது. பின் மாணவர் முன்னிலையில் எமது தோழர் நிறுத்தப்பட்டு மன்னிப்புக் கோருமாறு மாணவர் மன்றத்தால் பணிக்கப்பட்டார்.

அப்போது அவரது குற்றங்கள் அதிபரால் மாணவர்களுக்கு முன் வைக்கப்பட்டது. அக் குற்றங்களை ஏற்றுக்கொண்டு எமது தோழர் தனது கருத்தையும் முன்வைத்து மன்னிப்புக் கோரும் நோக்கத்துடன் மாணவர்களை விழித்து பேச முயன்ற போது அவர் தனது நியாயத்தைக் கூறிவிடுவார் எனவோ அல்லது தமது அதிகாரத்துவ அடக்குமுறையை அமுல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனோ சில பிற்போக்கு சக்திகளால் தடுக்கப்பட்டார். இக் குழப்பத்தின் மத்தியில் மாணவர்களால் கல்லூரிக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டு மின்கம்பத்தில் பிணைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டார். இங்கே மாணவர்களின் தன்னெழுச்சியை ஒரு சில பிற்போக்குச் சக்திகள் தமக்குச் சாதகமாகவே பயன்படுத்தியுள்ளன. இவ்வாறு தனது கருத்தைக் கூறி குற்றத்திற்கு மன்னிப்புக் கோரத் தயாராகவிருந்த தோழரின் ஜனநாயக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமை மறுக்கப்பட்டது ஒரு நீசத்தனமான செயலாகும். அத்துடன் இது ஓர் அதிகார வர்க்க அடக்குமுறை மனப்பாங்குமாகும்.

இவ்வாறு தண்டனை வழங்கிய பின்னரும் திருப்தியுறாத அதிகார வர்க்கம் எமது தோழரை திரும்பவும் மாணவர்கள் முன்னிலையில் நிறுத்தி பல பொது மக்களின் எதிர்ப்பினையும் மதிக்காது மன்னிப்புக் கோருமாறு நிர்ப்பந்தித்தனர். அப்போதும் அவருக்கு தனது கருத்தைக் கூற இடமளிக்கவில்லை. ஆனால் வேறொரு சந்தர்ப்பத்தில் மாணவர் முன்னிலையில் தமது கருத்தைக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்ற உறுதி மொழி அதிபராலும், மாணவர் மன்ற பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டது. ஆனால் அடுத்த நாள் 24/1/86 எமது தோழர்கள் இதற்கு அனுமதி கோரி சென்ற போது நிர்வாகம் முற்று முழுதாகவே மறுத்துவிட்டது. இது இவர்களின் ஜனநாயக உரிமைகளைமறுக்கும்அகதிாரத்துவ மனப்பாங்கையே வெளிப்படுத்துகின்றது. இன்றைய பாசிச சிறீலங்கா அரசின் முதலாளித்துவ நீதி மன்றங்களில் கூட (தமிழீழத்தில் அல்ல) ஒரு குற்றவாளி தனது கருத்தைக் கூற சுதந்திரம் வழங்கப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடப் படவேண்டியதொன்றாகும்.

இச் சம்பவத்தில் இருபக்கத்து ஜனநாயக உரிமைகளையும் மதித்து அதற்காகக் குரல் கொடுத்தவர்கள், உழைத்தவர்களான முற்போக்கான மாணவர்கள், ஆசிரியர்கள்; விடுதலை ஸ்தாபனங்கள், அனைவருக்கும் எமது நன்றியையும், நட்பையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தோழர் தவறிழைத்த போதிலும் தன்னை சுயவிமர்சனம் செய்ய முன்வந்ததைக்கூட சற்றும் கணக்கில எடுக்காது ஓர் குற்றம் செய்தவர் சுயவிமர்சனம் செய்வதற்கு அனுமதி வழங்காத அதிகாரத்துவ பிற்போக்கு முதலாளித்துவ நிர்வாகத்தை மாற்றியமைக்க அணிதிரளுமாறு அனைத்துப் புரட்சிகர சக்திகளையும் அறைகூவி அழைக்கின்றோம்.

அதிகார வர்க்க அடக்கு முறையை எதிர்த்து, ஜனநாயக உரிமைகளுக்காக குரல் கொடுக்க, மாணவர்களே கிளர்ந்தெழுங்கள்!
பாட்டாளி வர்க்க தலைமை ஓங்குக!
வெல்க தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு!

தமிழீழம்
27-1-1986

- புதிய ஜனநாயக மாணவர் சங்கம்
(N. D. S. U.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்